Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஐப்பசி 02 வியாழக்கிழமை (19-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 330

# 2 குடும்பங்களின் 11 பேர் மற்றும் நால்வர் இணுவிலில் புக்காரா தாக்குதலுக்குப் பலி!

## அவர்களில் எட்டுப் பேர் சிறுவர்


யாழ்ப்பாணம், ஒக். 19

ஸ்ரீலங்கா விமானப்படையின் புக்காரா விமானம் ஒன்று நேற்றுக் காலை 6 மணியளவில் இணுவில் கிழக்கு பகுதியில் அப்பாவிப் பொது மக்கள் மீது நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் உட்பட 15 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

திடீரென காலையில் பேரிரைச்சலுடன் வந்த புக்காராவின் சத்தத்தைக் கேட்டு பீதியால் நித்திரைப் பாயிலிருந்து எழுந்து ஓடி, இறந்த பங்கர் ஒன்றில் பாதுகாப்பு தேடி ஒளிந்துக் கொண்ட அப்பாவிகளே புக்காரா தாக்குதலுக்குப் பலியாகினர்.

அடியுயரத்தில் பறந்தவாறு — குறிதப் பதியாமலேயே — புக்காரா விமானம் அடுத்தடுத்து வீசிய றொக்கட் குண்டுகள் மேற்படி பதுங்கு குழியின் மேல் விழுந்து வெடித்ததால் அதில் தஞ்சம் புகுந்த அனைவருமே—

(8 ஆம் பக்கம் பார்க்க)



இணுவிலில் இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சில் பலியான அப்பாவிப் பொது மக்களின் உருக்குலைந்த சடலங்கள். (ஒ)

# புன்னாலைக்கட்டுவன் சந்திக்கு நகர முயன்ற படையுடன் கடும் சமர்

## தடுத்து நிறுத்தி புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 19

நேற்று முன்தினம் 'சூரியப்பிரகாச' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த ஸ்ரீலங்காப் படையினர் நேற்று பெருந்த எடுப்பில் புன்னாலைக்கட்டுவன் சந்தியை நோக்கி முன்னேற முயன்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்தி புலிகள் நேற்றும் தொடர்ந்து உக்கிரச் சமர் புரிந்தனர்.

கவச வாகனங்கள், டாங்கிகள் சகிதம் பெருந்த எடுப்பில் முன்னேற முயன்ற படையினரை புலிகள் தடுத்து நிறுத்தி தாக்கியபோதே கடும் சமர் மூண்டது.

இச்சமரில் படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் தரப்பில் 19 போராளிகள் நேற்று களப் பலியானார்கள். (உ-8)

## சுப்பசொனிக் குண்டு வீச்சில் உரும்பராயில் இளைஞர் பலி

### கோப்பாயில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 19

நேற்றுக் காலையும் மாலையும் பல தடவைகள் குடாநாட்டின் மீது பேரிரைச்சலுடன் பல தடவைகள் வட்டமிட்ட "சுப்பசொனிக்" விமானம் வலி. கிழக்கில் இரு தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

இத்தாக்குதல்களில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர். கட்டடங்கள் நாசமாகின.

நேற்றுக் காலை 10 மணியளவில் வட்டமிட்ட சுப்பசொனிக் விமானம் உரும்பராய் அலுமினியத் தொழிற்சாலை மீது ஒரு குண்டை வீசியது. அதனால் அத் தொழிற்சாலை தரைமட்டமாகியது. அருகில் சென்று கொண்டிருந்த — அச்செழு வடக்கைச் சேர்ந்த — காப்பர்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## படைகளுக்கு பேரிழப்பு

லண்டன், ஒக். 19

பத்தாயிரம் துருப்புகளை ஈடுபடுத்தி ஸ்ரீலங்கா படைகள் ஆரம்பித்திருக்கும் "சூரியப் பிரகாச" இராணுவ நடவடிக்கையில் அரச துருப்புகளுக்கு எதிர்பார்த்ததைவிட பேரிழப்பு ஏற்பட்டிருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

தேவைக்கு அதிகமாக முன்னேற முயன்ற ஓர் படையணி புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி பெரும் இழப்புகளைச் சந்தித்ததாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சுக்கு நேற்று மூவர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 19

வலிகாமம் கிழக்குப் பகுதி மீது நேற்று தொடர்ந்து படையினர் நடத்திய கண்மூடித்தனமான ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களினால் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர்; பன்னிரண்டு பேர் காயமடைந்தனர்.

நேற்று [illegible] னாமடம், இணுவில், உரும்பிராய், கோப்பாய் கிழக்கு, கோண்டாவில், நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்த வண்ணம் இருந்தன.

நேற்றைய ஷெல் தாக்குதல்களில் பல வீடுகள், கடைகள், கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

நேற்றுக் காலை 10 45 மணிக்கு கோண்டாவில் பகுதியில் விழுந்த ஷெல்லினால் நீர்வேலியில் இருந்து இடம் பெயர்ந்தவரான நடராசா தவமணி (வயது 52) என்பவர் உயிரிழந்தார் இவரின் மூன்று பேரப்பிள்ளைகள் இச்சம்பவத்தில் காயமடைந்தனர்

கொக்குவில் கிழக்கு காளி கோவிலடியில் விழுந்த ஷெல்லினால் சண்முகராசா மதியாபரணம் (வயது 46) என்பவர் தலைசிதறிப் பலியானார்.

உரும்பிராயில் ஷெல் ஒன்று ஒருவர் மீதே விழுந்து வெடித்ததால் அவர் அந்த இடத்திலேயே உடல் சிதறிப் பலியா

(7 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய அறிவித்தல்

சைவ வித்தியா விருத்திச்சங்கம்

## திருநெல்வேலிச் சிறுவர் இல்லம்

மேற்படி இல்லத்தில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோருக்கும், பாதுகாவலருக்கும் இவ்வறிவித்தல்:

இல்லம் தற்காலிகமாக மூடப்படவிருப்பதால், பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடனடியாக வந்து உங்கள் பிள்ளைகளைக் கூட்டிச் செல்லுமாறு வேண்டுகிறோம். மீள இல்லத்துக்குக் கூட்டிவரும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்,
தலைவர்,
சைவ வித்தியா விருத்திச்சங்கம்.

(சி-2506)

---

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்

அறிவித்தல்

## அலுவலக இடமாற்றம்

இதுவரை 499, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாச தலைமை அலுவலகம் இன்று (19-10-95) வியாழன் தொடக்கம் சுண்டிக்குழி, சோமசுந்தரம் லேனில் உள்ள இலக்கம் 52 கட்டடத்தில் இயங்கவுள்ள தென்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

எனினும் சமாசத்தின் காகிதாதி விநியோகப்பகுதி, சந்தைப்படுத்தல் பகுதி, அச்சகப்பகுதி என்பன தொடர்ந்தும் பழைய மேற்படி முகவரியில் இயங்கும் என்பதையும் தெரியப்படுத்துகிறோம்.

பொதுமுகாமையாளர்
வடமாகாண
தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.

[சி-2511]

---

# சந்திரிகாவின் கொடும்பாவி எரிப்பு

வடமராட்சி, ஒக். 19

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை ஆகியோரின் கொடும்பாவிகள் உடுப்பிட்டி நாவலடி சந்தியில் வைத்து நேற்று முன்தினம் (செவ்வாய்) இரவு கொளுத்தப்பட்டன.

கம்பர்மலை பகுதியிலிருந்து பறை மேளம், ஒப்பாரி ஒலிக்க ஊர்வலமாக இக்கொடும்பாவிகள் எடுத்துவரப்பட்டு கொளுத்தப்பட்டது.

(ஓ-178)

# சிறுவர் சித்திரக் காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். கல்வி வலயம் இரண்டின் பாடசாலைகளின் ஆண்டு 8 மாணவர்களின் சித்திரக் காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் மகா வித்தியாலய நூற்றாண்டு மண்டபத்தில் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியால் திறந்து வைக்கப்படும்.

# தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்விப் பிரிவில் பயிற்சி பெற்ற — ஆரம்ப ஆசிரியர் அல்லாத — பகுதி II பரீட்சைக்குத் தோற்றிய — பயிற்சி ஆசிரியர்களுக்கான கல்விப் பிரயோக சுற்று மதிப்பீட்டு அறிவுறுத்தல் வகுப்பு யாழ் இந்து நிலையத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். (உ)

# நல்லூரில் பாதுகாப்பு நிதி சேகரிப்பு

தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்க ஒப்புதலளித்துள்ள நல்லூர் பகுதி கிராம சேவை பிரிவுகளான ஜே / 106, ஜே / 107, ஜே / 108, கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் அனைத்து மக்களும் தங்களுடைய நிதியினை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலையில் அமைந்துள்ள பாதுகாப்புநிதி தொடர்பகத்தில் செலுத்துமாறு நல்லூர் பாதுகாப்புநிதி தொடர்பகத்தினர் கேட்டுள்ளனர்.

[ஒ]

# வெள்ளி விழா நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அதி - வண. ஏ.ஜே பேணாட் அடிகளாரின் குருத்துவப் பட்டம் பெற்ற 25 - ஆவது வருட வெள்ளி விழா நிகழ்வு இன்று கொண்டாடப்பட உள்ளது.

இன்று காலை 9 மணிக்கு வணக்கத்திற்குரிய பேணாட் அடிகளார் யாழ். ஆசனக் கோவிலில் திருப்பலி பூசையை ஒப்புக் கொடுப்பார்.

பூசையை அடுத்து கல்லூரியின் "மதுரம் சதுக்கத்தில்" அடிகளாரைக் கௌரவிக்கும் விழா நடைபெறும் [அ-30]

# மருந்தக ஊழியர்கள் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 19

தற்சமயம் உரும்பராய்மருந்தகத்தில் கடமையாற்றும் புன்னாலைக்கட்டுவன் அரசினர் மருந்தகத்தைச் சேர்ந்த ஊழியர்களை நல்லூர் கோவில் வீதியில் உள்ள தீவுப் பகுதி [illegible] வியாழன் முதல் கடமைக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது (ஓ-111)

---

# வாழ்த்துகிறோம்

எமது பாடசாலையின் பழைய மாணவரும் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபருமான

## அருட்திரு A. J. பேர்னாட் அடிகள்

குருத்துவ வெள்ளி விழா சிறக்க இறை ஆசிர் வேண்டி வாழ்த்துகிறோம்

சென்சாள்ஸ் மகாவித்தியாலய
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(89064)

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி மனோன்மணி ஜெயராஜா

(தையல் போதனாசிரியர்)

எமது பிரதேச செயலகத்தில் தையல் போதனாசிரியையாகக் கடமையாற்றிய திருமதி மனோன்மணி ஜெயராஜா அவர்களின் அகால மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
வலி - வடக்கு, தெல்லிப்பழை

(சி/2510)

---

# பால் கொள்வனவு

யாழ். மாவட்ட

## அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

தற்கால அசாதாரண சூழ்நிலையில் எமது சங்கத்திற்கு பால் வழங்கும் வாடிக்கையாளர்கள் தற்போது தாங்கள் பால்வழங்கும் கிளையில் பால் வழங்கமுடியாத சந்தர்ப்பத்தில் பின்வரும் ஏதாவது ஒரு கிளையில் பாலை வழங்கி தங்களது பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 1. மத்திய பால் சாலை | — | திருநெல்வேலி |
| 2. உரும்பிராய் பால்சாலை | — | பலாலிவீதி, உரும்பிராய் சந்தி |
| 3. இணுவில் பால்சாலை | — | காங்கேசன்துறை வீதி இணுவில் |
| 4. பெருமாள் கிளை | — | 90, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். |
| 5. ஆரியகுளம் கிளை | — | பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் |
| 6. மாக்கெட் கிளை | — | கண்டி வீதி, (மடத்தடி) யாழ்ப்பாணம் |
| 7. நல்லூர் கிளை | — | கோவில் வீதி நல்லூர் |
| 8. கல்வியங்காட்டு கிளை | — | ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு. |
| 9. அரியாலைகிளை | — | கனகரத்தினம் வீதி, அரியாலை. |

கூடியளவு காலை 7 மணிக்குப் பிந்தாமலும் பிற்பகல் 2 மணிக்குப் பிந்தாமலும் பாலை வழங்கி உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொதுமுகாமையாளர்

திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/2509)

---

# வெதுப்பக உரிமையாளர் சங்கம்

யாழ். மாவட்ட

## வெதுப்பியின் (பாணின்) விலை ரூ. 7/-

20 - 10 - 95 வெள்ளிக்கிழமை தொடக்கம் அரசாங்கத்தினால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டதனால் வெதுப்பியின் விலை ரூ. 7/- வாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது தற்காலிகமான விலையேற்றம், ஆகவே வியாபாரிகளுக்கு கொடுக்கப்படும் வெதுப்பிக்கான விற்பனைக் கழிவு -/25 சதத்தில் எதுவித மாற்றமும் இல்லையென்பதை சகல வர்த்தகப் பெருமக்களுக்கும் அறியத் தருகின்றோம்.

பாணைத் தவிர்ந்த மற்றைய உபஉணவுப் பொருள்களை மிக மிக குறைந்த அளவில் உற்பத்தி செய்யும்படி அங்கத்தவர்களை கேட்டுக் கொள்கின்றோம்.

விலை, நிறை, தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் இருந்தால் எமக்கு அறியத் தரவும்.

மாவட்ட தலைவர்
யாழ். மாவட்ட
வெதுப்பக உரிமையாளர் சங்கம்

183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

[சி-2507]

---

# கிருஹயக்ஞ ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

திருமதி

## இரத்தினம்மா வைத்தீஸ்வரஐயர்

நாளை [20-10-95] வெள்ளிக்கிழமை, சுற்றோக்கணை, உடுவிலில் நடைபெற இருந்த மேற்படி வைபவம், தவிர்க்கமுடியாத காரணத்தால் இலக்கம் 7 ஒடைலேன், வண்ணார்பண்ணையில் உள்ள இ. சந்தானகோபால சர்மாவின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று மேற்படி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்
வை. யோகீஸ்வரசர்மா
குடும்பத்தினர்

உடுவில்.

[சி/2508]

---

# 100 ஆவது நாள் நினைவலைகள்



தோற்றம்: 09 — 11 — 1940

மறைவு: 09 — 07 — 1995

## அமரர் சைமன் தங்கராஜா

(தங்கமயில்)

[யாழ். வர்த்தக பாதுகாப்புசேவை அதிகாரி]

அன்பின் திருவுருவே - எங்கள்
அணையாத சுடர் ஒளியே!
பண்பின் சிகரமே - எங்கள்
பாசத்தின் இருப்பிடமே!
நாங்கள் நூறு சென்றாலும் - அப்பா!
என்றும் எங்கள் உள்ளத்தில் நிறைந்திருப்பீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:-
மனைவி, பிள்ளைகள்,
மகன் கிரிதரன்

[89069)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பிள்ளைகள் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்; மனைவி காயத்துடன் துடித்துக்கொண்டிருந்தார்

## நேற்றைய சம்பவத்தில் தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக் 19

கடைக்குப் போய் இருந்த நான் குண்டு விழுந்தவுடன் ஓடி வந்தேன். எனது இரு பிள்ளைகளும் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள். மனைவி காயங்களுடன் துடித்துக் கொண்டிருந்தார்.

நேற்றைய புக்காரா குண்டு வீச்சில் தனது இரு பிள்ளைகளை இழந்த தம்பித்துரை என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 5-30 மணி அளவில் படுக்கை விட்டு எழுந்தேன்.

காலைக்கடன்களைக் கழிப்பதற்காக வெளியே செல்ல முன் இறந்து போன என் இளைய மகனான நிருஜாவிடம் சுருட்டு எங்கே என்று கேட்டேன்.

''இங்கே இருக்கிறதப்பா'' என எனது படுக்கையில் இருந்த சுருட்டை எடுத்துத் தந்தார்.

சுருட்டுடன் கிடந்த 5ரூபாவைப் பார்த்து விட்டு அப்பா எனக்கு 2 ரூபா தாருங்களா எனக் கேட்டார்.

வெளியே போய் விட்டு வந்து தருகிறேன் எனக்கூறி விட்டுச் சென்றேன்.

புக்காரா விமான இரைச்சலைக் கேட்டு வீடு திரும்ப நினைப்பதற்குள் திடீரென குண்டு விழுந்து வெடித்தது.

விமானத்தில் இருந்து அடுத்தடுத்து வந்த நான்கு குண்டுகள் எமது வீட்டுப் பக்கமாகவே விழுந்து வெடித்தன.

வீட்டை நோக்கி ஓடி வந்தேன். வீட்டு முற்றத்தில் என் பிள்ளைகள் இரத்த வெள்ளம் பெருக அசைவற்றுக் கிடந்தனர்.

என்னிடம் 2 ரூபா கேட்ட என் இளைய பிள்ளை வாயைத் திறந்தவாறு மல்லாந்து கிடந்தார்.

வீட்டின் முன்னால் 50 யார் தள்ளி குண்டு விழுந்து வெடித்திருந்தது.

பிள்ளைகளுக்கு அப்பால் என் மனைவி காயங்களுடன் துடிதுடித்துக் கொண்டிருந்தார். மூவரையும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன்.

இப்படி அவர் கூறினார்.

எனது பிள்ளை இறுதியாக என்னிடம் கேட்ட இரண்டு ரூபாவைக்கூட கொடுக்க முடியாத பாவியாகி விட்டேனே என்று கூறி அவர் அழுதார்.

### பாண் வாங்க சென்ற சமயம்

இதே சம்பவத்தில் கொல்லப்பட்ட கஜேந்திரன் என்பவரின் தந்தை புவனேஸ்வரன் கூறியதாவது:

அதிகாலை எழுந்து பாண் வாங்குவதற்காகச் சென்றேன்.

கடையில் நின்றபோது புக்காராவின் பேரிரைச்சல் கேட்டது.

வானத்தை அண்ணார்ந்து பார்த்த போது குத்திட்டபடியாகவே புக்காரா குண்டுகளை வீசியது.

ஒன்றன்பின் ஒன்றாக நான்கு குண்டுகள் வந்து கொண்டிருந்தன.

எமது வீட்டுப் பக்கமே குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. நான் ஓடிச்சென்றபோது அங்கே பதுங்குகுழியில் தஞ்சமடைந்திருந்தவர்கள் மண்ணால் மூடுண்டிருந்த காட்சியைக் கண்டு அதிர்ச்சி அடைந்து போனேன்.

பதுங்கு குழிக்கு வெளியேயும், வாசலிலும் ஆங்காங்கே சடலங்கள் கிடந்தன. அவற்றில் என் மகனும் இறந்து காணப்பட்டார்.

இப்படி அவர் கூறினார்.

இச்சம்பவத்தைக் கண்டவுடன் மயக்கம் அடைந்த புவனேஸ்வரன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு தற்போது மயக்கம் தெளிந்துள்ளார். (இ-15)

# இணுவில் குண்டு வீச்சில், காயமடைந்த 12 பேர்

யாழ்ப்பாணம், ஒக் 19

இணுவிலில் நேற்றுக் காலை இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சில் படுகாயமடைந்த 12 பேரின் விவரம் வருமாறு:

- ★ ஊரெழுவைச் சேர்ந்த சின்னத்தம்பி சுசித்ரா (வயது 18)
- ★ சின்னத்தம்பி சுகந்தி (வயது 15) இவர்கள் இருவரதும் பெற்றோர், சகோதரர் மூவர் இச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.
- ★ கிருஷ்ணமூர்த்தி மயூரன் (வயது 9) இவரது பெற்றோரும், சகோதரர்கள் நால்வரும் இச் சம்பவத்தில் பலியாகினர்.
- ★ இணுவிலைச் சேர்ந்த தம்பித்துரை ஜெயலட்சுமி (வயது 40) இவரது இரு பெண்பிள்ளைகள் இச் சம்பவத்தில் பலியாகினர்.
- ★ செல்வரத்தினம் இராசமணி (வயது 40) இவரது மகனான செல்வரத்தினம் அற்புதராசா (வயது 15)
- ★ ரஞ்சித் ரஜனி (வயது 22)
- ★ நடராசா விஜயபாஸ்கரன் (வயது 26)
- ★ செல்வராசா ரகுபரன் (வயது 6)
- ★ முருகுப்பிள்ளை கார்த்திகேசு (வயது 70)
- ★ ஆறுமுகம் முத்துவேலு (வயது 65)
- ★ ஊரெழுவைச் சேர்ந்த இராசதுரை சந்திரமோகன் (வயது 17)

இவர்கள் அனைவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஐ-15]

# பாண் வாங்க கியூவில் நின்றோர் சிதறி ஓட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 19

நேற்றுக் காலைவேளை திடீரென வந்த புக்காரா விமானத்தினால் யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

பேரிரைச்சலுடன் வந்த புக்காரா விமானம் இணுவில் பகுதியில் ரொக்கட் தாக்குதலை நடத்தியது. அவ்வேளை யாழ். நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் உள்ள பேக்கரிகளில் பாண் வாங்குவதற்காக அதிகாலையிலேயே வந்து கியூவில் நின்ற மக்கள் விமான இரைச்சல் கேட்டதும் அங்கும் இங்குமாகச் சிதறி ஓடி அலைப்பட நேர்ந்தது. பலரும் பாண் வாங்காமலேயே வீடுகளைச் சென்றடைந்தனர். (ஐ-15)

# அதிர்ச்சியால் மயங்கிய இருவர் ஆஸ்பத்திரியில்!

யாழ்ப்பாணம், ஒக். 19

இணுவில் பகுதியில் நேற்று புக்காரா விமானம் நடத்திய ரொக்கட் தாக்குதலின் போது அதிர்ச்சியால் மயக்கமடைந்த இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தம்பித்துரை சஜிதா (வயது 16), மார்க்கண்டு புவனேஸ்வரன் (வயது 38) ஆகிய இருவருமே அதிர்ச்சியால் மயக்கமடைந்துள்ளனர். (ஐ-15)

# முன்னாள் ராணுவ சிப்பாய் 'ரி 56' ரைபிளுடன் கைது!

## பொலீஸாரிடம் திருடப்பட்டதாம்

கொழும்பு, ஒக். 19

மாவனல்ல பொலீஸார் ரி-56 ரக துப்பாக்கி ஒன்றையும், அதற்கான 80 சன்னத் தோட்டாக்களையும் வைத்திருந்த முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவரை கைது செய்துள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு டிரக் வண்டி ஒன்றில் விசேட கடமைக்காக பிரயாணம் செய்து கொண்டிருந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து திருடப்பட்ட ரைபிளே இது என பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் முன்னர் இராணுவத்தில் கடமையாற்றி பின்னர் தப்பிச் சென்றவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பல வருடங்களுக்கு முன்னர் தன் தாயைக் கொலை செய்த ஒருவரையும் அவரது குடும்பத்தினரையும் பழிவாங்குவதற்காக இத்துப்பாக்கியை தாம் அபகரித்ததாக அவர் கூறியுள்ளார். [ஏ-3]

## பூந்தமல்லி சிறைச்சாலைக்கு

# மத்திய அரசின் பாதுகாப்பு கோருகிறது தமிழக அரசு!

புதுடில்லி, ஒக். 19

பூந்தமல்லி சிறைச்சாலையின் வெளிப்புறப் பாதுகாப்பை மத்திய அரசு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு கோரியுள்ளது.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் என். ஹரிபாஸ்கரனும், ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளையும் இந்திய உள்துறைச் செயலர் பத்மநாபையா அவர்களைச் சந்தித்துப் பேசியபோது அவரிடம் இந்தக் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சிறைச்சாலையில் கூடுதலாக பொது வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்; சிறையின் உட்புறப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கு நவீன பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட வேண்டும் எனவும் தமிழக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கைதிகள் பூந்தமல்லி சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளனர். (ஐ-எ)

## மறைக்கல்வி தேர்வு

குருநகர், ஒக். 19

யாழ். மறைமாவட்ட மறைக்கல்வித் தேர்வு திட்டமிட்டபடி எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறுமென தேர்வுக் குழு இயக்குநர் அருட்திரு ஆர். எச். சகாயநாயகம் அடிகள் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து உள்ளவர்கள் அந்தந்த இடங்களிலுள்ள பாடசாலைகளில் தேர்வு எடுக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு 3 ஆம் ஆண்டு தொடக்கம் 11 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளை சேர்ந்த 12 ஆயிரத்து 100 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர். [ஐ-51]

# வலி. கிழக்கில் 300 பொதுமக்கள் பாடசாலைகளிலும், கோவில்களிலும்

## பிரதிப் பொலீஸ்மா அதிபர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 19

இடிமுழக்க தாக்குதல் நடவடிக்கையின்போது படையினர் கைப்பற்றிய இடங்களில் உள்ள 300 பொதுமக்கள் அங்குள்ள பாடசாலைகளிலும், கோவில்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சிக்கு புதிதாக நியமனம் பெற்றுள்ள பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார் என கொழும்புப் பத்திரிகை [illegible] செய்தி ஒன்று தெரிவித்[illegible]

வடக்கில் படையினர் கைப்பற்றிய பகுதிகளில் உள்ள மக்களைச் சந்தித்தேன். அவர்களின் நன்மைகளை கவனிக்க இளவாலையில் பொலீஸ் நிலையம் ஒன்று [illegible] விக்கப்படுகிறது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தாரம்

அறிவழகன் போல இருக்குது; வாரும், வாரும்!

இணுவிலிலும் ஒரு கொடுமை கொலை, அதுதான் ''மசக்கர்'' ஒண்டு விடியக் காலையிலேயே நடந்திருக்குது; கேள்விப்பட்டீரோ?

பொழுது விடிஞ்சு விடியாதே புக்காரா இரைஞ்சு கொண்டு வந்த சத்தத்திலை வலிகாமம் பகுதி மக்கள் எல்லோருமே படுக்கை விட்டு எழும்பும் போதே பதற்றத்தோடை தான் எழும்பியிருக்கினம்.

எந்த இடத்திலை வந்து புக்காரா இரத்தப்பலி வாங்கப் போகுதோ என்று எல்லோரும் பதகளித்துக் கொண்டு சனம் பட்டபாடு... குழந்தைகள், குட்டியள், குஞ்சு குருமன் எல்லாருக்கும், சத்தத்திலேயே இரத்தம் உறைஞ்சிருக்கும்.

முந்தநாள் செவ்வாய்க்கிழமை வலிகாமம் கிழக்குப் பகுதியிலை நடந்த பெருஞ் சண்டையிலை ஆமிக்காரருக்குப் பெரிய இழப்பு.

செய்தித் தணிக்கைக்கு முன்னமே அவை உண்மை சொல்லுறதில்லை இப்ப கேக்கவே வேணும்...?

செவ்வாய்க்கிழமைப் போரில் தங்களுக்கு உண்டான இழப்புக்குப் பழி வாங்கத்தான் இணுவிலிலை ஒரு வீட்டிலை குடியிருந்த பதின்மூன்று பேரை பதுங்குகுழிக்குள்ளை வைத்து கொன்று போட்டிருக்கினம்.

பட்டணத்திலே படும் கெட்ட குடியே கெடும் என்று சொல்லுறது போல, ஆமிக்காரரை ஷெல்லுக்குப் பயந்து ஊரெழுவிலை இருந்து இடம் பெயர்ந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்களை புக்காரா நரபலி எடுத்திருக்குது...

நாங்கள் பொதுமக்களைத் தாக்கயில்லை; புலிகளின் இலக்குகளைத் தான் தாக்கினோம்; செத்தது எல்லாம் புலிகள்தான் என்று வழு ''சிப்பீனா'' அரசாங்கப் படைகள் பொய் சொல்லுவினம். உதை அவை வாய்ப்பாடமாக்கி வைச்சிருக்கினம்.

சண்டை நடந்தது அச்செழுப் பகுதியிலை — புக்காரா ''ரொக்கெட்'' குண்டு அடிச்சது இணுவில் [illegible] ரயில்வே நிலையத்துக்குக் கிட்ட.

இரண்டுக்கும் இடையில் ஐஞ்சாறு மைல் அளவில் வித்தியாசம் இருக்கும். 'புக்காரா' புலிகளின் மீது இலக்கு வைத்தால் ஏன் இஞ்சாலை குடிசனம் வசிக்கும் பக்கத்திலே வந்து விழவேணும்...?

வலிகாமம் வடக்கிலை இருந்து இடம்பெயர்ந்த ஆக்கள் கொட்டில்களைப் போட்டு வசித்த இடம் அது.

கண்ணுக்கு எட்டாத உயரத்தில் நின்று, குறி வைச்சு இடத்தைச் சரியா தாக்க முடியுமோ...? அந்த உயரத்திலை நின்று கண்டபடி குண்டுகளை தள்ளினா பொது சனம் தானே அகப்பட்டுச் சாகும்...?

அரசாங்கத்துக்கும் அது தானே தேவை...!

ஐப்பசி பிறந்துவிட்டுது. அடை மழை தொடங்குகிறதுக்கு முன்னம் ஆக்கிரமிக்கக் கூடிய பகுதியை ஆக்கிரமித்து விட வேணும் என்பது அரசின் இலக்கு. அது தான் அவை முந்தவே வந்து நின்டு தாக்குதல்களை நடத்துகிறார்.

புலிகளின் கையிலை சிக்கிற படையினரின் இழப்புக்குத் தமிழ்ப் பொதுமக்களை இரை எடுப்பது தான், பழிவாங்குவது தான், புக்காராக்கள், சுப்பசொனிக்குகளின்ரை வேலையா இருக்கும்......!

— கொண்டோடி.

# சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மாட்டின் ஒழுங்கையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் (1½) ஒன்றரை பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: வி. இந்திரா, இல. 10, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [39046]

சோதிடம்

ஜாதகம் கணிக்க கல்வி, தொழில், திருமணம் எதிர்கால பலன் அறிய இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர். (39048)

## நினைவு பேருரை

யாழ்ப்பாணம், ஒக் 19

டாக்டர் அருணாசலம் சிவபாதசுந்தரம் ஞாபகார்த்த பேருரை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ் போதனா வைத்திய சாலை சத்திர சிகிச்சை ஆலோசகர் டாக்டர் எம் கணேசரட்ணம் 'சிறுவர்களுக்கு ஏற்படும் காயங்கள்'' என்னும் பொருளில் உரையாற்றுவார். (எ)

## சாரண ஆணையாளராக புவனேந்திரன்

யாழ்ப்பாணம், ஒக். 19

கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளராக, கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியால ஆசிரியர் திரு. மா. புவனேந்திரன் இம் மாதம் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 1991 ஆம் ஆண்டு முதல் உதவி மாவட்ட ஆணையாளராகக் கடமையாற்றி வருகிறார். [எ]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி 1994 / 95 ஆம் கல்வி ஆண்டு அனுமதிக்கான நேர்முகத் தேர்வு

தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறியினை மேற்கொள்வதற்கான நேர்முகத் தேர்வு 1995 / 10 / 28 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 9-00 மணிக்கு பல்கலைக்கழக சபை மண்டபத்தில் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தவறாது சமுகமளிக்கவும் சித்தியடைந்தவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெயர் பட்டியல் யாழ்/ பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் பார்வையிடலாம்.

— பதிவாளர்.

(சி-2498)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 07 — 03 — 1963

உதிர்வு: 05 — 09 — 1995

திருமதி
### பாக்கியகுமாரி கனகராஜமுதலி

கொக்குவில் நந்தாவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட மழவராஜமுதலியின் மூத்த மகன் கனகராஜமுதலியின் மனைவியும், சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பூபாலபிள்ளை, சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், நிஷாந்தின் அன்புத் தாயாருமாகிய திருமதி பாக்கியகுமாரி கனகராஜமுதலி, 05 - 09 - 1995 அன்று கனடாவில் அகால மரணமானார்.

நால்வருள் ஒருவராகி நற்குடி தனில் உதித்து
கல்விகள் பலகற்று தேர்ச்சிகள் பல பெற்று
பண்போடு அன்புமாக கனடாவில்
வாழ்க்கைகொண்டு
பச்சிளம் மழலைக்கொரு அருமையாம் அன்னையாகி
இனிதேநீ வாழ்கின்றாய்என்று நாம் எண்ணும்வேளை
வந்ததே கொடிய செய்தி எப்படிப்
பொறுத்துக்கொள்வோம்
மூனாறு திங்களுக்குள் முடிந்ததோ இனிய வாழ்வு?
ஆண்டாண்டு மறைந்தாலும் நீங்காது உன் நினைவு

— குடும்பத்தினர்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை.

(38995)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
### அழகரத்தினம் சிவகெங்கா

தோற்றம்: 16 — 04 — 1928

மறைவு: 21 — 09 — 1995

அன்பும் பொறையும் அணிகலன்களாகக் கொண்டு எம்மை வழி நடத்திய எங்கள் குல விளக்காம் ஆருயிர் மனைவியே! அன்புத் தாயாரே! மாமியாரே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அமரரின் இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றினோர்க்கும், அனுதாபம் தெரிவித்தோர்க்கும் உடனாக நின்று உதவிய உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள், அன்பர்கள் அனைவர்க்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை 20 - 10 - 1995 வெள்ளிக்கிழமை 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனையும் செய்து பின் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறும் வேண்டுகிறோம்.

இங்ஙனம்;
கணவன் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

காலையடி,
பனிப்புலம்,
பண்டத்தரிப்பு.

[39050]

## யாழ். ஊர்திகள் நிலையம்

1995-09-01ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட ''யாழ். ஊர்திகள் நிலையம்'' யாழ். மக்களின் எல்லாவகையான வாகனங்களையும் வாகனச் சொந்தக்காரர்களின் நன்மை கருதிக் குறைந்த கட்டணங்களில் சுத்திகரிப்பு செய்ய ஆரம்பித்து உள்ளது. வாகன சுத்திகரிப்பு மட்டுமன்றி வாகன, மிதிவண்டி ரியூப்ஒட்டுதல், வால்க்கனேஸ், பொலிசிங் வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

யாழ். ஊர்திகள் நிலையம்,
இல. 50, இளங்கோ வீதி (மணிக்கூட்டு வீதி),
யாழ்ப்பாணம்.

(சி/2467)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்
### செல்லையா ஸ்ரீஸ்கந்தராசா

மண்ணில்: 25 — 01 — 1970

விண்ணில்: 11 — 11 — 1993

திதி: 19 — 10 — 1995

கண்ணின் மணியாய் காத்து வளர்த்தோம்
புண்ணியம் இல்லையே மண்ணில் மகிழ்ந்திட
காலன் வந்தானோ! கார் எனும் உருவிலே
ஆண்டுகள் ஓடினும் - அன்பு - உமை மறவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, சகோதர,
சகோதரிகள், அத்தான்மார்,
மருமக்கள், உறவினர்கள்.

கா. செல்லையா,
பிடாரி கோவிலடி,
கொக்குவில் மேற்கு.

[39053]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 18 — 09 — 1955

உதிர்வு: 18 — 09 — 1995

### திருமதி தெய்வேந்திரம் மகேஸ்வரி

(ஆசிரியை, யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை)

கடந்த 18-09-1995 எனது துணைவியாரின் மரணச்செய்தி கேட்டு அன்னாரின் மரணச் சடங்கில் நேரில் வந்து கலந்து கொண்டோர்க்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்திய கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி மற்றும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நீர்வேலி ப. நோ. கூ. சங்கம் தலைவர், நெறியாளர்கள், பொது முகாமையாளர், பணியாளர்கள், நண்பர்கள் மற்றும் உற்றார், உறவினர்களுக்கும், எமக்கு நேரடியாக நின்று உதவி புரிந்த அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இ. தெய்வேந்திரம்
(கணவர்)

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(39035)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 விடுதலைப் புலிகள் தமிழகத்தினுள் ஊடுருவல்

## மத்திய உள்துறைச் செயலர் சொல்கிறார்

சென்னை, ஒக். 19

தமிழகத்துக்குள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் ஊடுருவி உள்ளதாக மத்திய அரசு தமிழக அரசிடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இருபது சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட சுமார் 40 முதல் 50 விடுதலைப் புலிகள் தமிழ்நாடு கரையோரத்தில் இறங்கியுள்ளதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதாக மத்திய உள்துறை அமைச்சின் செயலாளர் பதிமநாபஐயா தமிழக அரச அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

தமிழக அரசுடன் இரண்டு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பின்னர் செய்தியாளர் மாநாட்டில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தமிழ் நாட்டிற்குள் பிரவேசித்த இவர்கள் அங்கு சிறையில் இருக்கும் தமது சகாக்களை விடுவிப்பதற்காக பொது இடங்கள் மீது தாக்குதல்களை நடத்த முயற்சிக்கக்கூடும் எனவும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

(ஐ-எ)

## ஐ. நா. மாநாட்டுக்கு சந்திரிகா செல்வார்

கொழும்பு, ஒக். 19

ஐக்கியநாடுகள் சபையின் 50ஆவது ஆண்டு பொன்விழா சிறப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.

## புத்தூர், அச்சுவேலி தபாலகங்கள் வரணியில்

அச்சுவேலி, ஒக். 19

அச்சுவேலி, மற்றும் புத்தூர் தபால் நிலையங்கள் வரணிப் பகுதிக்கு இடம்மாற்றப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளால் இப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இடம் பெயர்ந்த மக்களின் வசதி கருதி தபால் நிலையங்களை வரணியில் செயற்பட வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வரணியில் தற்காலிகமாக இயங்கும் நிலையங்களில் வைத்து புத்தூர், அச்சுவேலி பகுதி மக்களுக்கான கடிதங்கள் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-11)

## 80 ஆயிரம் ஈழத் தமிழர் பங்கேற்கும் பேரணி

### 23 ஆம் திகதி பிரான்ஸில்

யாழ்ப்பாணம், ஒக். 19

பிரான்ஸில் எதிர்வரும் 23ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ள பேரணியில் அங்குள்ள 80 ஆயிரம் ஈழத் தமிழர்கள் கலந்து கொள்வர் என செய்திகள் கூறுகின்றன.

ஈழத் தமிழர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இருந்து 31 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஸ்ராஸ்பேக்கில் இலங்கை அரசின் செயலை கண்டித்து இந்தப் பேரணியை நடத்தவுள்ளனர்.

இதேவேளை —

யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையை சித்திரிக்கும் புகைப்படங்கள் அடங்கிய பெரிய அளவிலான சுவரொட்டிகள் பிரான்ஸின் முக்கிய இடங்களிலும், ஏனைய ஐரோப்பிய நாடுகளின் முக்கிய இடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன.

(இ-எ-3)

## யாழ். வங்கிகளுக்கு பணம்; அனுமதி முற்றாக மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ். மாவட்ட வங்கிகளுக்கு பணம் எடுத்து வர பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்து விட்டதாக கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

திருகோணமலையிலிருந்து பருத்தித்துறைக்கு வரும் ''ஹபரண'' கப்பலில் பணம் எடுத்து வர செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் வங்கிகள் ஒழுங்குகளைச் செய்து இருந்தன.

பணம் எடுத்து வருவதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடம் வங்கி அதிகாரிகள் கோரியிருந்தனர்.

பாதுகாப்பு அமைச்சு பணம் எடுத்து வர அனுமதி வழங்காததால் வங்கி அதிகாரிகளின் முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-8-4)

## கூட்டணி கோரிக்கை

கொழும்பு, ஒக். 19

வடபகுதியில் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்காக அங்கு உணவுப் பொருள்களை தங்கு தடையின்றி அனுப்பி வைக்குமாறு த.வி.கூ. தலைவர் எம். சிவசிதம்பரம் ஜனாதிபதியை கடிதம் மூலம் கோரியுள்ளார்.

(ஐ-எ)

## வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 19

உடல் முழுவதும் எரிகாயங்களுடன் நேற்று முன்தினம் வைவ்வாய் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

மானிப்பாயைச் சேர்ந்த திருவிளங்கம் முருகேசம்பிள்ளை (வயது 75) என்பவரே உயிரிழந்தவராவார்.

(ஐ-15)

## தனங்கிளப்பில் பனை நடுகை

தென்மராட்சி, ஒக். 19

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை யொட்டி சாவகச்சேரி லயன்ஸ் லியோ கழகத்தினரால் சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் 800 பனம் விதைகள் நடப்பட்டன.

(இ-117)

## 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை நடத்தும் திட்டத்தில் மாற்றம் இராது

கொழும்பு ஒக். 19

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை நடத்தும் திட்டத்தில் மாற்றம் எதுவும் செய்யப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பாக தேசியகல்வி நிறுவனத்தினால் மதிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்பட்டது

இந்த மதிப்பீட்டின் அடிப்படையில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பதிலாக ஆண்டு 8க்கு புலமைப் பரிசில் பரீட்சை நடத்தப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

எனினும் ஆண்டு 5 க்கான புலமைப் பரிசில் பரீட்சையை ரத்துச் செய்வதால் பொது மக்கள் இதுவரை அனுபவித்து வந்த சலுகையை இழக்க நேரிடும் என்பதைக் கருத்திற் கொண்டு இந்த மாற்றத்தை தற்போது மேற்கொள்வதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 1, 2, 3 களுக்கான பாடவிதானங்களில் மாற்றங்களை தற்போது தேசிய கல்வி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 17 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்

எதிர்வரும் காலங்களில் புலமைப் பரிசில் பரீட்சை ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் எனவும்—

இப் பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும் எனவும்—

கணிதம், மொழி ஆகிய பாடங்களில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் விதத்திலும் ரியூசன் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களின் தொகையைக் குறைக்கும் நோக்கிலும் பரீட்சை வினாத்தாள்களில் மாற்றங்கள் செய்யப்படும் என்றும் அமைச்சு அதிகாரி தெரிவிக்கிறது.

(இ-10)

## அதிரடி அரங்கு

யாழ்ப்பாணத்தின் முக்கிய அரச பணிகளுக்குப் பொறுப்பான மிக முக்கியமானவர்களில் ஒருவர் அவர். ஆனால் வருடத்தில் முக்காலவாசி நாள்கள் கொழும்பில் குடித்தனம். எஞ்சிய நாள்கள் யாழ்ப்பாணத்தில் தட்டுப்படுவார்.

எங்கு நின்றாலும், கூட்டமும், கடிதமும் மட்டும் தான் அது அவருக்குக் கைவந்த கலை.

அவர் யாழ்ப்பாணத்தில் நின்றாலும் அல்லது கொழும்பு அலுவலகத்தில் 'டோரா'' போட்டாலும், காலை முதல் இருட்டும் வரை கீழே உள்ள அதிகாரிகள் அனைவரையும் இழுத்து வைத்துக் கொண்டு கூட்டம் வைப்பதும் —

பின்னர் அதி உத்தம ஜனாதிபதிக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் பக்கம் பக்கமாக — வரலாற்று ஆவணப் பாணியில் — கடிதம் எழுதுவதும்தான் அவர் செய்யும் வேலை.

தனது பதவியின் அதிகாரத்தை வைத்துக் கொண்டு கீழே உள்ள அதிகாரிகளை எடுத்தெறிந்து பேசி, சீறிப்பாய்ந்து விழும் இந்த மூத்த அதிகாரி கொழும்பில் தனக்கு மேல் உள்ள அதிகாரிகளைக் கண்டால் பெட்டிப் பாம்பாகி விடுவார்.

தனது திணைக்களம் யாழ். குடாநாட்டுக்கு ஆற்ற வேண்டிய அத்தியாவசியப் பணிகள் பலவும் சீர்குலைந்து குடாநாடு குட்டிச் சுவராகிக் கொண்டிருக்க —

இந்த அதிகாரி கொழும்பில் தங்களுக்காக ஏதோ வெட்டிப் பிடுங்கிக் கொண்டிருக்கிறார் என்று குடாநாட்டு மக்கள் நம்பிக் கொண்டிருக்க—

கொழும்பில் தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளையும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் அதிகாரிகளையும் அழைத்து விடிய விடிய வெற்று வேட்டு கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்; அல்லது விடிய விடிய கடிதங்களை ''டிக்டேட்'' செய்து கொண்டிருக்கிறார் அவர்.

யாழ்ப்பாணத்தில் அத்தியாவசிய சேவைகளை சீர்படுத்த உரியவர்களை நேரில் சந்தித்து நடவடிக்கை எடுப்பதை விடுத்து —

தனது சேவை ஒப்பந்தத்தை நீடிக்கச் செய்வதிலும் அது கிடைக்காவிட்டால் சர்வதேச நிறுவனம் ஒன்றில் தனக்கு ஒரு வேலையைத் தேடிக் கொள்வதிலும் முழு மூச்சாகச் செயற்படுகிறாராம் கொழும்பில் நின்று

— மின்னல்

## பேனாட் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா

### இன்று விமரிசையாக நடக்கிறது

இன்றைய தினம் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு அ. இ. பேனாட் அடிகளாரின் குருத்துவ வெள்ளிவிழா வாகும். கல்விச் சிந்தனையாளரும் சமூக சீர்திருத்தவாதியுமாகிய தந்தையவர்கள் எமது தமிழ்ச் சமுதாயத்தின் விலைமதிக்க முடியாத சொத்து என்றால் மிகையாகாது.

வடபுலத்திலுள்ள தொன்மை வாய்ந்த தாளையடி என்னும் கிராமத்தில் 1946ஆம் ஆண்டு ஆனி மாதம் பதினோராம் திகதி அல்போன்ஸ் எட்வீசம்மா தம்பதிக்கு நான்காவது புதல்வராக அருட்தந்தையவர்கள் பிறந்தார். அல்போன்ஸம் இருதயநாயகம் பேனாட் என்ற இயற்பெயருடன் பெற்றோரின் அன்பான அரவணைப்பில் வளர்ந்தார்.

தந்தையவர்கள் தனது ஆரம்பக் கல்வியை தாளையடி பாடசாலையில் பயின்றார். அதன் பின்னர் யாழ்ப்பாணம் புனித மாட்டீனார் குருமடத்தில் இணைந்ததுடன் புனித பத்திரிசியார் கல்லூரியில் கனிஷ்ட இடைநிலைக் கல்வியையும் மேற்கொண்டார். சிறுவயதில் இருந்தே தான் எதிர்காலத்தில் ஒரு கத்தோலிக்க மதகுருவாக விளங்கி இறைவனின் அழைப்பை மகிமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை அடிமனதில் கொண்டிருந்தார். புனித பத்திரிசியார் கல்லூரியில் தனது கல்வியை செவ்வனே பெற்று

— கே. ரஞ்சித் —

1963ஆம் ஆண்டு மேற்படிப்பைத் தொடர இந்தியா பயணமானார்.

இந்தியாவில் தத்துவம், இறையியல் ஆகிய துறைகளில் பாண்டித்தியம் பெற்று 1970 ஆம் ஆண்டு அங்கேயே குருத்துவப் பட்டத்தையும் பெற்றார். தந்தையின் குருத்துவப் பணி இலங்கையில் பல்வேறு இடங்களிலும் தொடர்ந்து; மிளிர்ந்தது.

உயர்கல்வியைத் தொடர்வதற்காக இங்கிலாந்து சென்று தத்துவம், சைவ சித்தாந்தம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி

### S. பாலசுப்பிரமணியம்

(பாதுகாப்பு உத்தியோகத்தர் இலங்கை வங்கி-சுன்னாகம்)

அவர்கள் 18-10-1995இல் அகால மரணமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
இலங்கைவங்கி,
சுன்னாகம்.

(39063)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## தீர்வு என்பது இன அழிப்பா?

ஸ்ரீலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி. சில்வா, புலிகளுக்கு எதிரான போர் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகக் கூறியிருக்கிறார்.

1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஈழப்போர் இரண்டு தொடங்கிய காலத்தில் இருந்து இந்த இறுதிக் கட்டக் கதை அடிக்கடி தெரிவிக்கப்பட்டு வருகிறது.

சிறில் ரணதுங்கா இராணுவத் தளபதியாக இருந்த காலம் தொடக்கம் அவரை அடுத்துத் தளபதிகளாக வந்த எல்லோருமே இந்த வார்த்தைகளை "பண" ஓதும் வாசகம் போல, மனப்பாடம் செய்து வைத்து வரிக்கு வரி காலத்துக்குக் காலம் ஒப்புவித்தார்கள்.

விடுதலைப் புலிகளின் முதுகெலும்மை உடைத்துவிடப் போவதாகச் ''சபதம்'' செய்த தளபதி சிசில் வைத்திய ரத்னா பூநகரியில் ஏற்பட்டபடு தோல்வியை அடுத்துப் பதவியையே ராஜினாமாச் செய்தார்.

சந்திரிகா அரசாங்கத்தின் இராணுவ மூலோபாயம் ஐக்கிய தேசியக் கட்சியினது மூலோபாயத்தை விட வித்தியாசமானது தான்.

முதலில் வடக்கை — மிகக் குறிப்பாக விடுதலைப் புலிகளின் இதயத்தளம் என்று கருதப்படும் யாழ்ப்பாணக் குடாநாட்டை — ஆக்கிரமிப்பது என்பதே இந்த அரசின் இலக்கு.

கிழக்கை இப்போதைக்கு இழந்தாலும் பரவாயில்லை; வடக்கை முதலில் தமது கைப்பிடிக்குள் கொண்டு வந்துவிட வேண்டும். அதன் பின்னர் கிழக்கில் இலகுவில் காலூன்றி விடலாம் என்பது சந்திரிகா அரசின் திட்டம்.

குடாநாட்டை முற்றாகக் கைப்பற்றுவது மிகக் குறிப்பாக யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றுவது என்பது பெரும் எண்ணிக்கையான மக்களின் அழிவிலேயே சாத்தியம் — இராணுவ ஆய்வாளர்களின் கருத்து இதுவாகவே இருக்கிறது.

தமிழ் மக்களின் பரச்சினையைத் தீர்ப்பதற்காகவே போர் நடத்துவதாகக் கூறும் அரசாங்கம், உண்மையில் தமிழ் மக்களை அழிப்பதனைத் தான் தனது தீர்வாகக் கொண்டிருக்கிறது.

அவ்வாறில்லை என்றால் போர் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டதாக எவ்வாறு சொல்ல முடியும்? யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவது தான் அரசாங்கம் (அல்லது) இராணுவத் தளபதி கூறும் இறுதிக் கட்டமானால்—

தொட்டுத் தொட்டு நூற்றுக் கணக்காகத் தமிழர்களை கொடுமை கொலைகள் செய்யும் அக்கிரமத்தில் இருந்து மேலும் பல பல படிகள் மேலே சென்று—

ஆயிரக் கணக்கில் தமிழர்களைக் கொன்று குவிக்கும் காட்டுமிராண்டித் தனத்துக்கு — அரக்கத்தனத்துக்கு ஆயத்தமாகிறது என்பதே அர்த்தம்.

சந்திரிகா ஒரு புதிய ஹிட்லராக மாறுவதற்கு, இராட்சத யாத்திரம் ஏற்பதற்குத் தயாராகிறார் என்பதே பொருள். இதற்குப் பிறகும் சர்வதேச உலகம் கைகட்டி, வாய் பொத்தி, கண் மூடி மௌனமாக இருக்கப் போகிறதா?

# யாழ். மக்களின் அவலத்தை நேரில் பார்த்தனர் சர்வதேசப் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 19

யாழ்ப்பாணம் வந்துள்ள சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் குடாநாட்டு மக்கள் அவலப்பட்டு இடம்பெயர்ந்து செல்லும் காட்சிகளை நேற்று நேரில் பார்த்து கவலையுற்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் பிள்ளை குட்டிகளுடன் வீதிகளில் ஓடோடிச் சென்றதையும் அவர்கள் கண்டனர்.

நேற்றுக்காலை பருத்தித்துறைக்கு வந்த 'ஹபரண' கப்பலில் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், கனடா கிறிஸ்தவ சிறுவர் அமைப்பு, ஐக்கிய ராஜ்ய சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகிய அமைப்புக்களைச் சேர்ந்தவர்களே நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

## வல்லை ஷெல் வீச்சில் பெண் காயம்

வடமராட்சி, ஒக். 19

வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை 9.30 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் பெண் ஒருவர் காயமடைந்தார். வீடு சேதமானது.

வல்வெட்டித்துறை வேம்படி வீதி வீடொன்றிலேயே ஷெல் விழுந்து வெடித்தது அவ்வீடு சேதமானது.

காயமடைந்த பெண் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

ஏனைய ஷெல்கள் வல்வெட்டித்துறை கொத்தியால் காட்டுப்புலம் ஆகிய கரையோரப் பகுதிகளிலும் வீழ்ந்துவெடித்தன.

(ஒ-173)

## விமான இரைச்சலால் நேற்று மக்கள் பதகழிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

சுப்பசொனிக் மற்றும் புக்காரா விமானம் நேற்று குடாநாட்டு வான் பரப்பில் பேரிரைச்சலுடன் பலதடவைகள் சுற்றியதால் மக்கள் பெரிதும் பதற்றம் அடைந்தனர்.

வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் விமானங்களின் இரைச்சல் கேட்டு மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர் என்று எமது செய்தியாளர்கள் பலரும் அறிவிக்கின்றனர்.

சாவகச்சேரி நகரப்பகுதியில் வியாபாரிகள், அலுவலக ஊழியர்கள், மாணவர்கள், பாதசாரிகள் பலரும் பதறியடித்துக்கொண்டு ஓடினர். வீடுகளில் இருந்த பலர் வயல்வெளிப் பகுதிகளை நாடி ஓடினர்.

[ஒ-13-15-31-117-152 173-ரி]

## செவ்வாய் ஷெல் வீச்சில் பலியானோர் 5 ஆக உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 19

நேற்று முன்தினம் ஊரெழுவில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் நள்ளிரவு அங்கு மமணமானார்.

ஜெயராசா மனோன்மணி (வயது 40) என்பவரே மரணமானவர் ஆவார்.

இவருடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஷெல்வீச்சில் இறந்தோரின் எண்ணிக்கை ஐந்தாக உயர்ந்துள்ளது.

இதேவேளை —

ஊரெழுவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் போது சேணியடி வைரவர் கோவில் பகுதியில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமான இனந்தெரியாத சிறுவன் நேற்று இனங்காணப்பட்டார்.

ஊரெழுவைச் சேர்ந்த குண்டுமணி குமுதன் (வயது 14) என்ற சிறுவனே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-15)

ஆங்கில ஆசிரியர் ஆட்சேர்ப்பு:

## நேர்முகப் பரீட்சை கடிதம் கல்வி அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 19

1994 ஜூன் 11 ஆம் திகதி நடைபெற்ற பரீட்சையின் அடிப்படையில் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு 30 பேர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை வவுனியா கல்வித் திணைக்களத்தில் நடைபெற உள்ளது.

சம்பந்தப்பட்டோருக்கான நேர்முகப் பரீட்சை கடிதங்கள் யாழ். வலயம் ஒன்றின் கல்வி அலுவலகத்துக்கு நேற்றுவந்து சேர்ந்தன.

அவர்களின் பெயர் விவரத்தை கல்வி அலுவலகத்தில் அறிந்து கொள்ள முடியும்.

உரியவர்கள் நேர்முகப்பரீட்சைக்கடிதங்களை பெற்றுக் கொள்ளும்படி கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(ஒ)

கப்பலில் மா வந்துசேர்ந்தது:

## பாணுக்கு உள்ள தட்டுப்பாடு நாளை முற்றாக நீங்கிவிடும்

குடாநாட்டில் பாணுக்கு உள்ள தட்டுப்பாடு நாளை முதல் முற்றாக நீங்கிவிடும் என்று செயலக அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'ஹபரண'' கப்பலில் இருந்து மா இறக்கும் பணி உடன் ஆரம்பமானதாகவும்—

இறக்கப்பட்ட மா நேரடியாக பேக்கரிகளுக்கு விநியோகிக்கப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

மா வந்து சேர்ந்ததும் பாண் உற்பத்தியில் வெதுப்பகங்கள் ஈடுபட்டுள்ளதாகவும்— இன்று ஓரளவு பாணை அவர்களால் வழங்க முடியும் என்றும்—

நாளை முதல் பாண் தட்டுப்பாடு முழுமையாக நீங்கிவிடும் என்றும்— செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஒ-3-173-5)

## காசு கொடுப்பனவு

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கான ஒரு தொகை காசு தம்மிடம் உள்ளது எனவும் சம்பந்தப்பட்டோர் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 00 மணிக்கு கன்னாதிட்டி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்கு அடையாள ஆவணங்களுடன் வருகைதந்து காசைப் பெற்றுக்கொள்ளும்படியும் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

ச.கா.சபாநாதன் ச.கா.பாலகிருஸ்ணன் தேவாலைய வீதி, சங்கானை, வேலுப்பிள்ளை சந்தவனம் நீர்வேலி தெற்கு, (வைரவர் கோவிலடி) சபாரட்ணம் நாகேஸ்வரி அராலி தெற்கு, வட்டுக்கோட்டை சிவசிதம்பரம் புவனேஸ்வரி சிவகுமார் வீதி. சுன்னாகம் மேற்கு சத்தியமூர்த்தி சுசிலா தேவி சிவகுமார் வீதி. சுன்னாகம் மேற்கு ந. குருபரன் வள்ளியம்மன் கோவிலடி, சுழிபுரம் கிழக்கு செ. செல்வரட்ணம் காளி கோவில் வீதி. ஏழாலை மத்தி சிவகுரு விஜிராசா 3 ஆம் சந்தி கொருடாவில், தொண்டமனாறு பொ. கணேசலிங்கம் சுகிதா நலகமடம், சுன்னாகம் தம்பையா இராசரத்தினம் ஆச்சிரமத்தடி, கரந்தன் நீர்வேலி மேற்கு கே. யோதிலிங்கம் ஐயனார் வீதி. சண்டிலிப்பாய் பாலசிங்கம் நாகேஸ்வரி நீர்வேலி தெற்கு திரு. கந்தப்பு சண்முகம் நளின் வீதி. வட்டு கிழக்கு ந. சரஸ்வதி சரப்பிட்டி பிள்ளையார் கோவிலடி அராலி தெற்கு [illegible] இருமதி. [illegible] [illegible].

(ஒ)

## சுப்பசொனிக்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருதயராசா (வயது 22) என்ற இளைஞர் கால் துண்டிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

மீண்டும் நேற்று மாலை நான்கு மணிக்கும், ஆறு மணிக்கும் இரு தடவைகள் வட்டமிட்ட சுப்பசொனிக் விமானம் மாலை 6 மணியளவில் கோப்பாய் தெற்கு இராசவீதிப் பகுதியில் குண்டுகளை வீசியது.

ஒரே நேரத்தில் வீசப்பட்ட எட்டு றொக்கட் குண்டுகளினால் மூவர் காயமடைந்தனர்.

வீடொன்றில் விழுந்த குண்டினால் வீடு பலத்த சேதமடைந்தது. வீட்டில் இருந்த எஸ். சண்முகம் (வயது 65) என்பவரும், தோட்டப்பகுதியில் விழுந்த குண்டினால் அருகில் உள்ள வீட்டில் இருந்த செல்லத்துரை [illegible] ராசா (வயது 13) நடராசா நளினி (வயது 9) ஆகியோரும் காயமடைந்தனர். (உ-15)

## காவல்துறை தீவிரப்பணி

யாழ்ப்பாணம், ஒக். 19

வலி கிழக்கில் படையினர் இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதை அடுத்து ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலையில்—

இராணுவ நடவடிக்கைப் பிரதேசத்துக்கு சூழவுள்ள பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியில் தமிழீழ காவல்துறையினர் தொடர்ந்தும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

காயமுற்றோரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காகவும்—

போராளிகள் யுத்தப் பணியில் தடையின்றி செயலாற்றுவதற்கு வசதியாகவும்—

வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பில் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

விடுதலைப் போருக்கு குந்தகமான முறையில் செயற்பட்ட காவல்துறை உறுப்பினர் ஒருவர் மருதனார்மடம் பகுதியில் வைத்து கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாக யாழ் நகரில் அடிபட்ட வதந்தி குறித்து விசாரித்த போது அதில் எள்ளளவும் உண்மை இல்லை என்பது தெரியவந்தது.

''பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் உதவும் வகையில் தமது உயிரைத் துச்சம் என மதித்து உழைத்து வரும் காவல்துறையினரை களங்கப்படுத்தும் விதத்தில் இத்தகைய வதந்திகளைப் பரப்புவது வேதனைக்குரியதாகும் —

யுத்த முனையில் பணிபுரிந்த காவல் துறையினர் காயமுற்று கிடக்கும் நிலையில் இத்தகைய வதந்திகளைப் பரப்புவது பொறுப்பற்ற செயலாகும்'' — என காவல்துறை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன.

(உ)

## ஷெல்வீச்சுக்கு நேற்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

ஏழாலை தெற்கைச் சேர்ந்த சோமசுந்தரம் பாலசுப்பிரமணியம் (வயது 57) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

நேற்றைய ஷெல் தாக்குதல்களில் காயமுற்றோர் விவரம் வருமாறு:-

கொக்குவில் கிழக்கில் ஒரு வீட்டின் அருகில் விழுந்து வெடித்த ஷெல்லினால் வீட்டினுள் இருந்த செல்வர் தவராசா (வயது 35) என்பவர் காயமடைந்தார்; வீடு பலத்த சேதமடைந்தது; தண்ணீர் தாங்கி முற்றாக சிதறியது.

கோண்டாவில் பகுதியில் விழுந்த ஷெல்லினால்—

இராஜகோபால் சகிலா (வயது 16), அவரது சகோதரியான இராஜகோபால் மிதுலா (வயது 13), இராஜகோபால் பிரமிளா (வயது 10), மற்றும் பூபாலசிங்கம் ரஜனி (வயது 43), அவரது பிள்ளைகளான பூபாலசிங்கம் றஜீதரன் (வயது 12), பூபாலசிங்கம் நிஷாந்தன் (வயது 9), ஆகியோரும் சத்தியநாதன் சசிகுமார் (வயது 17) தியாகராசா துரைமணி (வயது 52) என்ற பெண்மணி, குருசுமுத்து அருளானந்தம் (வயது 33) ஆகியோரும் காயமுற்றனர்.

அச்செழு பிள்ளையார் கோவில் மீது நேற்று மாலை விழுந்து வெடித்த ஷெல்லினாலேயே பிள்ளையார் கோவில் பலத்த சேதமடைந்தது. பாதுகாப்புக்காக கோவிலில் தஞ்சம் புகுந்திருந்த ஐவரில் இருவர் காயமுற்றனர். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த அம்பலவாணர் கனகநாயகி (வயது 65), ஈவினையைச் சேர்ந்த எஸ். சாந்தன் (வயது 30) ஆகியோரே அங்கு காயமுற்றனர்.

கோப்பாய் ஆஸ்பத்திரிச் சந்தியிலும் ஷெல் வீழ்ந்து வெடித்தன. எனினும் பெரும் சேதம் ஏற்படவில்லை.

கோப்பாய் கைதடி வீதியில் கோப்பாய் மயானத்திலும், கல் உடைக்கும் ஆலை ஒன்றிலும் அடுத்தடுத்து வீழ்ந்த ஷெல்களால் மரங்களும் கட்டடங்களும் சேதமடைந்தன.

[உ-13-15-117]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சியில் நடைபெற இருந்த

## தமிழ்மொழி கலைத்திறன் போட்டி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

கிளிநொச்சியில் நடைபெற இருந்த வடதமிழீழப் பள்ளிகளுக்கு இடையிலான தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இப்போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமையும் மறுதினம் சனிக்கிழமையும் கிளிநொச்சியில் நடத்துவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

போட்டிகள் நடைபெறும் நாள்கள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் தெரிவித்தனர். [ஓ]

---

உ

## ஸ்ரீராமகிருஷ்ண - விவேகானந்த புத்தகக் கண்காட்சி

யாழ். வேம்படி மகளிர் பாடசாலை மாணவிகளுக்கு மட்டும்

**20-10-95** வெள்ளிக்கிழமை

திருமதி செல்வருபி ஸ்கந்தராசா
[அதிபர்]

காலை 9-00 மணிக்கு இப்புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்கள்.

முக்கிய குறிப்பு:

எங்கள் சேவாச்சிரமம் 1,000 வீட்டுத் திட்டத்துக்கு உதவிகள் செய்துள்ளது. தொடர்ந்தும் எங்கள் உதவி இத் திட்டத்துக்கு இருக்கும்.

— செயலாளர்

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா
பருத்தித்துறை சேவாச்சிரமம். (கி-2503)

---

## தணிக்கைக்கு எதிராக ஐ.தே.க. வழக்கு

அரசின் செய்தி தணிக்கைப் பிரகடனத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஐ.தே.க. நேற்று வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தது. (உ-6)

---

**படைகளுக்கு...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து பி.பி.ஸி. தெரிவித்ததாவது:-

இராணுவம் எதிர்பார்த்ததை விட அதற்கு ஆட்சேதம் அதிகம்.

இதனால் இராணுவ அதிகாரிகள் கலக்கமடைந்திருக்க வேண்டும்.

இந்த நடவடிக்கையின் உடனடிக் குறிக்கோள்களை இராணுவம் எய்திவிட்டது என்றே தோன்றுவதாக இராணுவ வட்டாரங்கள் கூறுகின்றன.

புலிகள் பெரிய அளவில் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டால் அன்றி, இன்னும் பல நாள்களுக்கு தற்காலிகமாக சேர நிறுத்தப்பட்டிருக்கும் என்றும் —

இந்தக் காலத்தில் இராணுவம் புதிய நிலைகளை உறுதிப்படுத்திக் கொண்டு அடுத்த தாக்குதல் நடவடிக்கையைத் திட்டமிட்டு ஆரம்பிக்கும் என்றும் —

பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இவ்வாறு பி.பி.ஸி குறிப்பிட்டது. (உ-3)

---

**2 குடும்பங்களின்...**
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ஒருவர் கூட தப்பாது — உயிரிழந்தனர்.

*தலைகள் துண்டாகிக் கிடந்தன*

றொக்கட் தாக்குதலால் மூடப்பட்ட பதுங்கு குழியைக் கிளறி சடலங்களை மீட்ட போது பல சடலங்களில் குண்டுச் சிதறல்களின் காயங்கள் காணப்பட்டன; நான்கு சடலங்களின் தலைகள் முற்றாக சிதறிக் கிடந்தன.

நேற்றுக் காலை 6.00 மணி போல் புறா போன்ற உருவத்தில் மிகச் சிறியதாக வானத்தில் தோன்றிய புக்காரா முதலில் மருதனார்மடம் பெண்கள் நிலையத்திற்கு அருகில் உள்ள தோட்ட வெளியில் குண்டுகளை வீசியது. அதில் ஒன்று வெடித்தது. ஏனையவை இரண்டும் நிலத்துக்குள் புதைந்தன.

*மீண்டும் வந்தது*

மீண்டும் பத்து நிமிடம் கழித்து வந்த புக்காரா இணுவில் பகுதியில் றொக்கட் தாக்குதலை நடத்தியது.

இணுவில் காளிகோவிலடிக்கு பின்னால் — மழையர் தரிப்பு நிலையத்துக்கு அருகே — இணுவில் சனசமூக நிலையத்துக்கு அண்மையில் — இடம்பெற்ற இத் தாக்குதலில், அக்கா, தம்பி குடும்பங்களைச் சேர்ந்த பதினொரு பேர் உட்பட 15 அப்பாவிகள் அநியாயமாகப் பலியாகினர். அவர்களில் எண்மர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் வலிகாமத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைக்கு தப்பி இடம்பெயர்ந்து பாதுகாப்புத் தேடி இணுவிலில் உள்ள தமது சகோதரர்களின் வீட்டில் தங்கியிருந்த போதே அந்த இரு குடும்பங்களுக்கும் இக் கதி நேர்ந்தது. அவர்களது குடும்பத்தில் அக்காவின் குடும்பத்தில் இரு பெண் பிள்ளைகளும், தம்பியின் குடும்பத்தில் ஒரு சிறுவனும் மட்டும் காயங்களுடன் தப்பியுள்ளனர்.

நேற்றும் நேற்று முன்தினமும் இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற அச்சுவேலிப்பகுதியிலிருந்து ஐந்து மைல் தூரத்திற்கு அப்பால் புக்காரா குண்டு வீச்சு இடம்பெற்ற [illegible] குறிப்பிடத்தக்கது.
[illegible]

---

## இணுவிலில் இறந்தோர்

இணுவில் கிழக்கு திவேட்டர் ஒழுங்கைப் பகுதியில் இடம்பெற்ற புக்காரா தாக்குதலில் உயிரிழந்த இரு குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் உட்பட 15பேரினதும் விபரங்கள் வருமாறு:-

*முதல் குடும்பம்*

★ கணபதி கிருஷ்ணமூர்த்தி [வயது 39] — குடும்பத் தலைவர்
★ மனைவி கிருஷ்ணமூர்த்தி பரமேஸ்வரி [வயது 34]
★ மகள் கிருஷ்ணமூர்த்தி ஜனிதா [வயது 16]
★ மகள் கிருஷ்ணமூர்த்தி வனிதா [வயது 14]
★ மகன் கிருஷ்ணமூர்த்தி தயாபரன் [வயது 13]
★ மகன் கிருஷ்ணமூர்த்தி நவநீதன் [வயது 11]
★ கடைசி பிள்ளையான மயூரன் இச்சம்பவத்தில் காயமுற்றுள்ளார்.

*மற்றைய குடும்பம்*

★ தம்பிஐயா சின்னத்தம்பி [வயது 48] — குடும்பத்தலைவர்
★ மனைவி சின்னத்தம்பி வள்ளிப்பிள்ளை [வயது 45]
★ மகள் சின்னத்தம்பி செல்வரஞ்சிதமலர் [வயது 23]
★ மகன் சின்னத்தம்பி சசிகுமார் [வயது 21]
★ மகன் சின்னத்தம்பி ரமேஷ்குமார் [வயது 18]

*ஏனையோர்*

★ தம்பித்துரை விஜயா [வயது 18] — இராமநாதன் மத்திய கல்லூரி மாணவி.
★ விஜயாவின் சகோதரி தம்பித்துரை நிருஜா [வயது 9] — இணுவில் மத்திய கல்லூரி மாணவி.

இவர்களது தாயார் படுகாயமடைந்துள்ளார்.

★ நகுலேஸ்வரன் ஜீவிதா [வயது 12]
★ புவனேஸ்வரன் சுஜேந்திரன் [வயது 9] — இணுவில் மத்திய கல்லூரி மாணவன். (உ-4-13-15)

---

## தாயின் சேலையுள் பதுங்கிய சிறுவன் தப்பினான்!

### தாயும் குடும்பத்தவரும் பலி!!

யாழ்ப்பாணம், ஒக். 19

இணுவிலில் நேற்றுக் காலை இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சின் போது பயத்தில் தாயின் சேலைக்குள் பதுங்கிய அவரது கடைசி மகன் மயூரன் மட்டும் உரசல் காயங்களுடன் தப்பினான். தாயும் குடும்பத்தில் ஏனையோரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

புக்காரா இரைச்சலைக் கேட்டதும் குடும்பத்தவர்கள் திறந்த பதுங்குகுழிக்குள் தஞ்சம் புக —

தாயார் கிருஷ்ணமூர்த்தி பரமேஸ்வரி வீட்டுச் சுவர் ஓரமாக விழுந்து படுத்துக் கொண்டார். அவரது கடைசி மகனான மயூரன் (வயது 9) தாயின் சேலைக்குள் புகுந்து பதுங்கினான்.

புக்காராவின் றொக்கட் தாக்குதலில் தாயாரும், பதுங்குகுழியில் தஞ்சம் புகுந்த தந்தையார், இரு சகோதரர்கள், இரு சகோதரிகள் ஆகியோரும் உயிரிழக்க —

குடும்பத்தில் கடைசி மகனான மயூரன் மட்டும் உரசல் காயங்களுடன் தப்பினான்.

குடும்பத்தினர் அனைவரையும் இழந்து தனித்து தவிக்கும் அவனின் நிலை பரிதாபமாக உள்ளது. (உ-4)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அவுராம்பிள்ளை இராசமலர்

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த திருமதி அவுராம்பிள்ளை இராசமலர் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் திரு. அவுராம்பிள்ளை [ஓய்வுபெற்ற வேதிம் ஓவசியர் போட் கொமிஷன் கொழும்பு] அவர்களின் அன்பு மனைவியும், ராஜன் (இத்தாலி), பெபியா (இத்தாலி), சுசிலா, ஞான் [இத்தாலி], யோகராஜா [இத்தாலி] ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற பொன்னுத்தம்மா, புஷ்பலீலா [கொழும்பு], அமிர்தநாதன் (குவைத்) ஆகியோரின் சிறியதாயாரும், அமிர்தநாதன் [நாதன் இத்தாலி], யோகேந்திரன் (பிரான்ஸ்), சுகந்தி [இத்தாலி], ஜெயந்தா [கொழும்பு], மகாதேவா [கொழும்பு] யோகேந்திரன் (குவைத்), நேசராணி [கொழும்பு] ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயா [இத்தாலி], சுயா, தெறியா, தனுசன், சிந்து [இத்தாலி] லெனா (இத்தாலி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை 19-10-95 வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு கண்டிக்குளி பரியோவான் சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. அவுராம்பிள்ளை
[கணவர்]
திருமதி சுசிலா யோகேந்திரன்
[மகள்]

140 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (89057)

---

### திருமதி தவமணி நடராசா

நீர்வேலி வடக்கு மாசிவன்னையை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கோண்டாவில் கிழக்கில் வசித்தவருமான திருமதி தவமணி நடராசா நேற்றுக் காலை கோண்டாவிலில் அகால மரணமானார்.

இவர் வயிரமுத்து நடராசாவின் அன்பு மனைவியும், மல்லிகாதேவி, சாரதாதேவி, இரத்தினேஸ்வரன், இராஜேஸ்வரன், சந்திராதேவி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசசேகரம், லோகநாதன், ஜீவானந்தராசா [பிரான்ஸ்], விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சகிலா, மிதிலா, பிரமிளா, சதீஸ், சுரேஸ், தாட்சாயினி, அனோராஜ், விமல்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிக் கிரியைகள் கோண்டாவில் கிழக்கில் உள்ள அன்னாரின் மைத்துனர் வ. செல்லையா அவர்களின் இல்லத்தில் நேற்று [18-10-95] புதன்கிழமை நடைபெற்று, கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. நடராசா
[கணவர்]

[39867]

---

## வீரச்சாவு

செல்வன்

### துரைச்சாமி சத்திய நாராயணன்
### (வீரவேங்கை கதிரவன்/திருச்செல்வம்)

சாவகச்சேரி சோலைக் குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட சு. துரைச்சாமி இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வன் சத்தியநாராயணன் 17-10-95 அன்று வீரமரணம் அடைந்து விட்டார்.

இவர் சத்தியபாமா [ஆசிரியை], கேமலதா (கொழும்பு), சத்தியவாணி [சாவ மகளிர் மகா. வித்], சத்தியவதி [சாவ மகளிர் மகா. வித்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி ஐ. கண்ணகைப் பிள்ளையின் அன்புப் பேரனும், திரு திருமதி க. செல்வரத்தினம் இராசம்மா, திரு திருமதி சு. சந்திரசேகரம் யோகமணி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், திரு திருமதி. புனிதவதி இராசேந்திரம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் வித்துடல் [18-10-95] நேற்று புதன்கிழமை கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
சு. துரைச்சாமி
(தகப்பனார்)

கல்வயல்,
சாவகச்சேரி. (39068)

---

### கந்தசாமி கிருபாகரன்
### (வேங்கையன் — மாமா)

மாதகல் பாதம்பையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கிருபாகரன் (வேங்கையன்-மாமா) 17-10-95 இல் வீரமரணமடைந்தார்

இவர் கந்தசாமி திலகவதி தம்பதியரின் (கனடா) அன்பு மகனும், ராணி, கோபால் [கணபதி மில், கிளிநொச்சி], சிவா (இந்தியா), காஞ்சனா (கனடா), சுரன் [கனடா] ஆகியோரின் சகோதரரும், ஆனந்தன், புவனம், தயா, பாலகிருஷ்ணன், ராசாத்தி ஆகியோரின் மைத்துனருமாவார்.

வித்துடல் நேற்று 18-10-95 இல் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. பொன்னம்பலம்
(மாமன்)

11, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம். [89070]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-10-95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org